TAMIL MURASU, TUESDAY, 14 AUGUST 2018, PAGE 3

# மருத்துவ கல்வி அறக்கட்டளையை அமைக்க என்டியூவுக்கு $11மி. மானியம்

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் (என்டியூ), மருத்துவக் கல்வி, சுகாதார ஆய்வு ஆகிய வற்றுக்கான அறக்கட்டளையை அமைக்க 11 மில்லியன் வெள்ளி யைப் பெற்றது. மறைந்த திருவாட்டி ஐரீன் டான் லியாங் தமது உயிலில் விட்டுச் சென்ற அந்தத் தொகைக்கு வெள்ளிக்கு வெள்ளி என்ற அடிப்படையில் அரசாங்கம், $11 மில்லியன் வழங்குகிறது.

வசதி குறைந்த மாணவர் களுக்கு தரமான மருத்துவக் கல்வியை வழங்க நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழத் தின் லீ கொங் சியான் மருத்துவ பள்ளி மேற்கொள்ளும் முயற்சி களை இந்த நிதி ஆதரிக்கும்.

அடுத்த ஆண்டு ஆகஸ்ட் முதல், ஒவ்வோர் ஆண்டும் மருத்துவப் பள்ளியில் சேரும் மாணவர்களில் ஒருவருக்கு இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

மேலும், நீரிழிவு, மனநல சுகாதாரம் உள்ளிட்ட முக்கிய நோய்களின் தொடர்பில் ஆய்வை நடத்துவதற்கு, அறக்கட்டளையில் இருந்து ஊதியம் பெறும் இரண்டு பேராசிரியர் பதவிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

பொது மக்களின் உடல்நலத்தை உயர்த்த உதவும் நடவடிக்கைகள், நோயாளிகளை மையப்படுத்தும் பராமரிப்பு ஆகியவற்றைப் பற்றியும் ஆய்வுகள் நடத்தப்படும்.

என்டியு தலைவர் சுப்ரா சுரேஷ், பல்கலைக்கழகத்தின் நொவீனா வளாகத்திலுள்ள சுகாதார அறிவியல் கட்டடத்தில் ‘ஓங் டியோங் டாட் என்ட் ஐரீன் டான் லியாங் கெங்’ என்ற அரங்கத்தை நேற்று காலை திறந்துவைத்தார். நிதியை வழங்கிய தம்பதியரின் பெயர், 500 இருக்கைகளைக் கொண்ட அரங்கிற்குச் சூட்டப் பட்டுள்ளது.




நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு மறைந்த திருவாட்டி ஐரீன் டான் லியாங் விட்டுவைத்த 11 மில்லியன் வெள்ளி. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**